# திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தொழில் நெறி வழிகாட்டும் கருத்தரங்கம்

## கலெக்டர் வ.மோகனச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது



**திருவாரூர்,அக்.16-**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் தொழில் நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் கலெக்டர்வ.மோகனச்சந்திரன், தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில், கலெக்டர் கல்லூரி மாணவ, மாணவியர்களிடம் தெரிவித்ததாவது... தற்பொழுது பல உயரிய பதவிகளை வகிப்பவர்கள் சாதாரண கிராமத்தில் பிறந்து, தமிழ் வழியில் கல்வி படித்தே நல்ல நிலையினை அடைந்துள்ளனர். எனவே, சாதனைகள் படைப்பதற்கு தற்பொழுதுள்ள சூழ்நிலை போன்றவை நமக்கு தடைக்கற்களாக இருக்கக்கூடாது. இளம்பருவத்திலேயே ஒரு குறிக்கோளினை மையமாக கொண்டு அதற்காக பாடுபட வேண்டும். நானும் தமிழ் வழியில், அரசுப்பள்ளியில் படித்தே தற்பொழுது மாவட்ட ஆட்சியராக உள்ளேன். என்னால் முடியுமென்றால், உங்களாலும் முடியும்.

தொடர்ந்து, அரசால் நடத்தப்பெறும் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்கு வெளியூர் சென்று படித்தால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்பது கிடையாது. மாவட்டத்தில் செயல்படும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் படித்தே வெற்றி பெற முடியும் என்பதற்கு சான்றாக திருவாரூர் மாவட்டத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் தொடர்ந்து பயிற்சி பெற்ற 62 நபர்களில் 17 நபர்கள் போட்டித்தேர்வில் வெற்றி பெற்று அரசுப்பணியினை பெற்றுள்ளனர்.

எனவே, இளம்வயதிலே, உங்கள் இலட்சியம் உயர்வாகவே இருந்தால் மட்டுமே நீங்கள் வாழ்வில் பெரிதளவில் வெற்றி பெற முடியும். எந்தவித பொழுது போக்கு அம்சங்களிலும் அதிக நேரம் கவனம் செலுத்தாமல், 6 மாதங்கள் தொடர்ந்து உங்கள் எதிர்கால இலட்சயத்திற்காக செயல்பட்டால், நிச்சயம் அந்த இலக்கினை அடைய முடியும் என கலெக்டர்வ.மோகனச்சந்திரன், தெரிவித்தார்.

தொடர்ந்து, திருவாரூர் மாவட்ட அளவில் நடைபெற்ற கலை திருவிழாவில் பங்கேற்று வெற்றி பெற்ற திருத்துறைப்பூண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு திருவாரூர் கலெக்டர்வ.மோகனச்சந்திரன், பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள். முன்னதாக, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் தொழில் நெறி வழிகாட்டும் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கினை திருவாரூர் கலெக்டர்வ.மோகனச்சந்திரன், பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சந்திரசேகரன், பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) கணபதிசுந்தரம், முதல்வர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருத்துறைப்பூண்டி மாறன், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் சோமஅழகன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கரூர் மாவட்டத்திற்கு 4.50 லட்சம் பனை விதைகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

## செய்தியாளர்கள் பயணத்தில் கலெக்டர் மீ.தங்கவேல் தகவல்



**கரூர்,அக்.16-**

கரூர் மாவட்டம், வெள்ளியணை சொட்டைக் குளத்தில் வனத்துறை, பசுமை தமிழ்நாடு இயக்கம், காலநிலை மாற்ற இயக்கம், சார்பாக செய்தியாளர் பயணத்தில் பனை விதை நடும் நிகழ்ச்சியினை மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தொடங்கி வைத்து தகவல். பின்னர் மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,


தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் பனை விதை நடும் பணியை ஒரு முக்கியமான இயக்கமாக, தொடங்கி வைத்துள்ளார்கள். இதன் மூலம் தமிழ்நாட்டின் மாநில மரமான பனையைப் பாதுகாப்பது, அதன் எண்ணிக்கையை அதிகரிப்பது, நிலத்தடி நீரை மேம்படுத்துவது, கடற்கரை மற்றும் நீர்நிலைப் பகுதிகளைப் பாதுகாப்பது மற்றும் பசுமைப் பரப்பை அதிகரிக்க முடியும்.

அந்த வகையில் இன்றைய தினம் கரூர் மாவட்டத்தில், "ஒரு கோடி பனை விதைகள் நடும் நெடும் பணி" என்ற பெயரில் கிரீன் நீடா போன்ற சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் தமிழக அரசின் துறைகளுடன் இணைந்து இந்தப் பணியை மேற்கொள்ள உள்ளனர். காவிரிக் கரையில் பனை விதை நடும் பணியில் ஒகேனக்கல் முதல் பூம்புகார் வரை காவிரிக் கரையின் இருபுறமும், சுமார் 416 கி.மீ. தொலைவுக்கு பனை விதைகள் நடும் பிரம்மாண்டமான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியானது தொடர்புடைய மாவட்ட நிர்வாகங்கள், வனத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, தன்னார்வலர்கள், மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் ஒத்துழைப்புடன் இப்பணி மாநிலம் முழுவதும் நடைபெறுகிறது. இந்த இயக்கத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள நீர்நிலைகள், ஏரிக்கரைகள், குளக்கரைகள், தரிசு நிலங்கள் மற்றும் காவிரிக் கரை போன்ற இடங்களில் பனை விதைகள் நடப்படுகின்றன.

மேலும், நடப்பு 2025 ஆம் ஆண்டுக்கான பனை விதை நடும் திட்டத்தின் இலக்கு 6 கோடி பனை விதைகளை தமிழகம் முழுவதும் நடுவது என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் 6 கோடி பனை விதைகள் நடும் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்திற்கு 4.50 இலட்சம் பனை விதைகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இன்றைய தினம் சொட்டைக் குள கரையோரத்தில் 350 பனை விதைகள் நடும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளதென மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் சண்முகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வீ.ரெ.வீரபத்திரன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் சரவணன், தன்னார்வலர்கள், மாணவ, மாணவியர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீடாமங்கலம் செயின்ட் ஜுட் பள்ளியில் அறிவியல் கண்காட்சி



**நீடாமங்கலம்,அக்.16-**

நீடாமங்கலம் செயின்ட் ஜுட் மெட்ரிக் தனியார் மேல்நிலைப்பள்ளியில் மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் பிறந்த நாளை யொட்டி நடந்த கண்காட்சிக்கு மூத்த தாளாளர் நடராஜன் தலைமை வகித்தார். மூத்த முதல்வர் சுகுணவதி முன்னிலை வைத்தார். தாளாளர் விக்னேஷ் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக பெரியார் மணியம்மை பல்கலைக்கழக உதவி பேராசிரியர் அன்பரசு கலந்து கொண்டு மாணவர்களின் படைப்புகளை பார்வையிட்டார். கண்காட்சியில் 12 ஆம் வகுப்பு மாணவன் முகம்மது இஸ்லாம் கண்டுபிடித்த செயற்கை நுண்ணறிவு திறன் பயன்பாடு சம்பந்தமான கண்டுபிடிப்பு வரவேற்பு மெற்றது. 75 வகையான படைப்புகள் கண்காட்சியில் இடம் பெற்றது. 150 மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் முதல்வர் செல்வம், பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர் .இறுதியில் செயலாளர்.அநிரூபிதா நன்றி கூறினார்.

# பழைய ஓய்வூதியத்திட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்

## ஆசிரியர்கள் போராட்டம்



**திருவாரூர்,அக்.16-**

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில், பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும்.இடைநிலை ஆசிரியர் ஊதிய முரண்பாட்டை சரி செய்திட வேண்டும்.தகுதித் தேர்வில் இருந்து ஆசிரியர்களை முற்றிலுமாக பாதுகாத்திட வேண்டும்.அரசாணை 243ஐ கைவிட வேண்டும்.உயர் கல்வி படிப்புகளுக்கு மீண்டும் ஊக்க ஊதியம் வழங்க வேண்டும்.அரசாணைகளின் படி பெறப்பட்ட ஊதியத்திற்கு தணிக்கை தடை வழங்குவதை கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டும்.இதனை நடைபெறும் தமிழக சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவிப்புகளாக வெளியிட வேண்டும் என்பதை வலியுறுத்தி அக்டோபர் 15, 16 மற்றும் 17 ஆகிய மூன்று நாட்கள் கோரிக்கை அட்டை அணிந்து பணியாற்றுவது என முடிவு செய்யப்பட்டது.அதன்படி தமிழகம் முழுவதும் கூட்டணியினர் கோரிக்கை அட்டை அணிந்து பணியாற்றினர்.திருவாரூர் அருகே பவித்திரமாணிக்கம் நடுநிலைப்பள்ளியில் கோரிக்கை அட்டை அணிந்து பணி புரியும் போராட்டத்தை பொதுச்செயலாளர் ஈவேரா தொடங்கி வைத்தார்.இதில் பள்ளியின் தலைமையாசிரியர் ஜெயந்தி உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.இதுபோல் மாவட்டத்தில் 10 ஒன்றியங்களிலும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியை சேர்ந்த 1750 ஆசிரியர்கள் கோரிக்கை அட்டை அணிந்து பணியாற்றினர்.

# மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வரதாச்சாரியார் பூங்காவில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி




**மயிலாடுதுறை,அக்.16-**

மயிலா வரதாச்சாரியர் பூங்காவில்செய்தி மக்கள்தொடர்புதுறை சார்பாக தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைத்த புதிய திட்டங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியது குறித்த புகைப்படங்கள் அமைக்கப்பட்டிருந்தது. மேலும், தமிழ்நாடு அரசின் பல்வேறு சிறப்பு திட்டங்களான, மக்களைத் தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின், மக்களுடன் முதல்வர், உங்களுடன் ஸ்டாலின், இன்னுயிர் காப்போம் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம், முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித்தோட்டம் மற்றும் மாடித் தோட்டம் அமைக்க காய்கறி விதைகள் வழங்குதல், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்குதல், விவசாயிகளுக்கு 1 இலட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பள்ளி மாணவர்களுக்கு வானவில் திட்டம். மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு தொழில் சார் கடனுதவிகள் வழங்குதல். மீண்டும் மஞ்சப்பை, புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் புகைப்படங்கள், மேலும், பிறபடுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் பிற துறை அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் கலெக்டர் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தது.

# தஞ்சாவூர் மாவட்டம் பிள்ளையார்பட்டி ஊராட்சியில் ரயில் வேகன்கள் மூலம் நெல் மூட்டைகள் அனுப்பி வைக்கும் பணி

## கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் நேரில் ஆய்வு



**தஞ்சாவூர்,அக்.16-**

தஞ்சாவூர் மாவட்டம் பிள்ளையார்பட்டி ஊராட்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக நெல் மற்றும் அரிசி சேமிப்பு கிடங்கு, சந்தானம் நெல் சேமிப்பு கிடங்கு ஆகியவற்றில் நெல்மூட்டைகள் பாதுகாப்புடன் சேமிக்கும் பணிகள் இரயில் தலைப்பு பகுதியில் இரயில் வேகன்கள் மூலம் நெல் மூட்டைகள் அனுப்பி வைக்கும் பணி நடைபெற்று வருவதை கலெக்டர்பா.பிரியங்கா பங்கஜம், (15.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு KMS 2025 – 2026 பருவத்தில் நெல் விவசாயம் செய்துள்ள விவசாயிகளிடமிருந்து அறுவடை செய்யப்பட்ட நெல்லினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை பாதுகாப்பாக சேமித்து வைக்கும் பணிகளை கலெக்டர் நேரில் பார்வையிட்டு நெல் கொள்முதல் பணிகளை துரிதப்படுத்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், தற்போது பெய்து வரும் மழையிலிருந்து நெல் மூட்டைகளை பாதுகாக்கும் வண்ணம் நெல் சேமிப்பு நிலையங்களின் கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்து தேவையான இடங்களில் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தினார். மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 01.09.2025 முதல் 14.10.2025 வரை தஞ்சாவூர் அலகில் 199 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் கும்பகோணம் அலகில் 51 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள், பட்டுக்கோட்டை அலகில் 42 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் என மொத்தம் 292 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் மூலமாக 41,798 மெ.டன் சன்னரக நெல்லும் 99,550 மெ.டன் பொது ரக நெல்லும் என மொத்தம் 1,34,348 மெ.டன் நெல் 25,199 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு அவர்களின் வங்கி கணக்கில் ரூ.324,98,84,452 வரவு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் மொத்தம் 66,864 மெ.டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தற்பொழுது விவசாயிகளால் கொண்டுவரப்படும் நெல்லினையும் போர்க்கால அடிப்படையில் கொள்முதல் செய்யவும், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை பாதுகாப்பான முறையில் சேமித்து வைத்து இயக்கம் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கலெக்டர்பா.பிரியங்கா பங்கஜம், தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக மேலாளர் (தரக் கட்டுப்பாடு) வி.கார்த்திகை சாமி , உதவி மேலாளர் ல.ரமேஷ்குமார் , தர ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# நீடாமங்கலத்தில் பனை விதைகள் நட்டு பனை உயிர் வேலி அமைத்த மாணவர்கள்



**நீடாமங்கலம்,அக்.16-**

தஞ்சை- நாகை தேசிய நெடுஞ்சாலையில் நீடாமங்கலம் அருகே நகர் ஊராட்சியில் அரசு தொழில் பயிற்சி நிலையம் உள்ளது. இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அறிவுறுத்தலின்படி மாநில நாட்டு நலப்பணித்திட்டக்குழுமம், கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பு, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டக்குழுமம், திருவாரூர் மாவட்ட வனத்துறை இணைந்து ஒருங்கிணைக்கும் ஒரு கோடி பனை விதைகள் நடும் நெடும் பணியில் நேற்று நீடாமங்கலத்தில் பனை விதைகள் நட்டு பனை உயிர் வேலி அமைத்த அரசு தொழிற்கல்வி மாணவர்களின் செயல் பொதுமக்களின் பாராட்டைப் பெற்று வருகிறது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தை சுற்றிலும் திறந்த வெளியாக இருந்தது. சுற்றுச்சுவர் கட்டப்படாத நிலையில் பனை விதைகளை நெருக்கமாக விதைத்து பனை உயிர் வேலி அமைத்துள்ளனர். திருவாரூர் மாவட்ட வனப் பாதுகாவலர் அபிராமி பேசுகையில், பனை விதைகள் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் விதைத்து மண்ணரிப்பை தடுக்க வேண்டும். வனத்துறை மூலம் இலவசமாக வழங்கப்படும் மரக்கன்றுகளை பெற்று தங்கள் பகுதியை பசுமையாக வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் சுற்றுச்சூழல் மேம்படும் என்றார்.

நிகழ்ச்சியில் கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கிரீன் நீடா மு.ராஜவேலு, திருவாரூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.ஆர்.கே.ஜானகிராமன், பயிற்சி அலுவலர் எஸ்.சண்முகநாதன், பயிற்றுனர்கள் எம்.குமரேசன், பொ.விஜயராஜா, தா.செந்தில்குமார், எஸ்.தனராஜ், வி.செல்வமணி ஆகியோர் கலந்து கொண்டனர். ஐடிஐ வளாகத்தில் நட்ட பனை விதைகளின் எண்ணிக்கையை தமிழ்நாடு பசுமை இயக்கம் செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டது. முன்னதாக அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் மா.பாலசுப்ரமணியன் வரவேற்றார். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் ஜெ.இளையராஜா நன்றி கூறினார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நெய்விளக்கு பள்ளியில் மாற்றுதிறனாளி குழந்தைகளுடன் தீபாவளி பண்டிகை கொண்டாட்டம்



**வேதாரண்யம்,அக்.16-**

வேதாரண்யம் அருகே நெய்விளக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சமக்கிர சிக்ஷா அபியான் திட்டத்தில் செயல்படும் ஆதாரவள மையத்தில் கல்வி கற்கும்; மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு ஆசிரியர் மூலம் சிறப்பு பயற்சி அளிக்கப்பட்டு வருகிறது இந்த நிலையில் இந்த மாற்று திறனாளி குழந்தைகளுடன் தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட்டது தீபாவளி பண்டிகையையொட்டி பள்ளியில் பயிலும் 25 மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கு வேதாரண்யம் எஸ்.எஸ் அறக்கட்டளை சார்பில் பள்ளியில் பயிலும் திறனாளி குழந்தைகளுக்கு தீபாவளி பண்டிகையை யொட்டி இனிப்பு புத்தாடைகள் வழங்கும் விழா நடைபெற்றது விழாற்கு தலைமை வகித்த எஸ்.எஸ் அறக்கட்டளை தலைவரும் மாநில வணிகர் சங்க துணைத் தலைவருமான தென்னரசு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு புத்தாடை மற்றும் இனிப்புகளை வழங்கினார் எஸ்.எஸ் அறக்கட்டளை செயலாளர் மல்லிகா தென்னரசு முன்னிலை வகித்தார் தோப்புத்துறை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் தெட்சிணாமூர்த்தி வரவேற்றார் வட்டாரக் கல்வி அலுவலர் ஜெயந்தி, பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சின்னச்சாமி, முன்னாள் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் நந்தகுமார் உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர் பள்ளி தலைமை ஆசிரியர் (பொறுப்பு) பாலமுருகன் நன்றி கூறினார்

# ஆடுதுறை பேரூராட்சியில் டாக்டர் அப்துல்கலாம் பிறந்த நாள் விழா

**தஞ்சாவூர்,அக்.16-**

ஆடுதுறை பேரூராட்சி அலுவலகத்தில் பேரூராட்சி தலைவர் ஸ்டாலின், துணைத் தலைவர் கமலா, கவுன்சிலர்கள் கவுன்சிலர்கள் முத்துபீவி, சரவணன், செல்வராணி ,பரமேஸ்வரி, சாந்தி, பாலதண்டாயுதம், குமார், முன்னாள் கவுன்சிலர்கள் சிவக்குமார், செந்தமிழ் செல்வி, சரவணக்குமார்,

மற்றும் கவுன்சிலர்களின் குடும்பத்தினர் முன்னாள் குடியரசுத் தலைவர் மறைந்த டாக்டர் அப்துல் கலாம் 94 வது பிறந்த நாளை முன்னிட்டு பேரூராட்சி அலுவலகத்தின் முகப்பில் அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு மாலை அணிவித்து பூவி மரியாதை செய்தனர். தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்க கூடினர். அவர்களிடம் தஞ்சாவூர் பேரூராட்சிகள் உதவி செயற்பொறியாளர் சதீஷ் பாபு, திருவிடைமருதூர் இன்ஸ்பெக்டர் ராஜா, அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் துர்கா, திருநீலக்குடி போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் சரண்யா, பேரூராட்சி செயல் அலுவலர்கள் செந்தில்குமார், ராஜதுரை ஆகியோர் பேச்சு வார்த்தை நடத்தினர். பேச்சு வார்த்தை முடிவில் பேரூராட்சி துறை அலுவலர்கள் மற்றும் போலீசார் கொடுத்த வாக்குறுதி அடிப்படையில் அரசின் மீது நம்பிக்கை வைத்து தற்காலிகமாக உண்ணாவிரதப் போராட்டத்தை ஒத்தி வைக்க முடிவு செய்துள்ளோம் என பேரூராட்சி தலைவர் ஸ்டாலின் மற்றும் கவுன்சிலர்கள் கூறினர்.



புதுக்கோட்டைமாவட்ட பேரிடர்மேலாண்மைஅலுவலகத்தில், வடகிழக்குபருவமழையினை முன்னிட்டு செயல்பட்டுவரும் மழைக்கால அவசர கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகள் குறித்து, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அஜய்யாதவ், கலெக்டர்மு.அருணாதலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ. ராஜாராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பா.ஜெயசுதா, தனி மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ரம்யாதேவி, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# நாகப்பட்டினம் மற்றும் கீழையூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கலெக்டர் ப.ஆகாஷ் ஆய்வு



நாகப்பட்டினம்,அக்.16-

நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் தேமங்கலம் ஊராட்சி சிராங்குடி புலியூர் கிராமம் மற்றும் கீழையூர் ஊராட்சி ஒன்றியம் ஆய்மூர் ஊராட்சி, சஈனூர் ஊராட்சி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் மூட்டைகளை கொள்முதல் செய்வது, கொள்முதல் செய்யப்படுகின்ற நெல்லின் ஈரப்பதம், தரம், நெல் மூட்டைகளின் எடை போன்றவைகளைவைகளையும், விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் மூட்டைகளை கொள்முதல் செய்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு மற்றும் ஆலைகளுக்கும் தாமதமின்றி எடுத்துச் செல்லும் பணிகளையும் கலெக்டர்ப.ஆகாஷ், ஆய்வு செய்தார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் காரிப் 2025-2026 ஆம் ஆண்டு குறுவை பருவத்தில் தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக 124 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 56,729 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு இதுவரையில் 36,852 மெ.டன் நெல் சேமிப்பு கிடங்குகளுக்கு இயக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதில் 9,671 விவசாயிகளுக்கு ரூ.125.09 கோடி தொகை வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு குறுவை பருவத்திற்கு 23 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மட்டுமே திறக்கப்பட்டு, சுமார் 5,440 மெ.டன் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆண்டு இந்நாள் வரையில் 124 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 3,493 மெ.டன் அளவிற்கு மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் நேற்றைய தினம் (14.10.2025) ஒரே நாளில் 3,509 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 16 மடங்கு அளவிற்கு கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது என கலெக்டர் தெரிவித்தார்.

மேலும், அதிகமாக நெல் வரத்துடைய 3 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 2 நெல் தூற்றும் இயந்திரங்கள் உள்ளன. விவசாயிகளை காத்திருக்க வைக்காமல், நெல் மூட்டைகளை விரைவாக கொள்முதல் செய்ய வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு கொள்முதல் நிலைய பணியாளர்;கள் பணமாகவோ, கூடுதலாக நெல்லாகவோ பெறுவது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தொடர்ந்து, விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்து அவர்களது குறைகளை நிறைவேற்ற உரிய அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அ.சிவப்பிரியா, வேளாண்மை துறை இணை இயக்குநர் எஸ்.கண்ணன், விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram,
Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam,
Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## கலெக்டர் வே.சரவணன் நேரில் ஆய்வு

திருச்சி,அக்.16-

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பொது மக்கள் தங்களுடைய கோரிக்கை மனுக்களை அளித்து தீர்வு காணும் வகையில் 04 இடங்களில் முகாம்கள் நடைபெற்றது. இம்முகாம்களின் வாயிலாக நகர்புறத்திற்கு 13 துறைகள் மூலமாக 43 சேவைகளும், ஊரகத்திற்கு 15 துறைகள் மூலமாக 46 சேவைகளும் வழங்கப்படும் வகையில் இம்முகாம்கள் நடைபெற்று வருகிறது. அதன்படி மாவட்டத்தில் (15.10.2025) 04 இடங்களில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து 2231 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் (15.10.2025) உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாநரகாட்சி பகுதிகள் மண்டலம் 4 வார்டு எண் 56 பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திருச்சிராப்பள்ளி கருமண்டபம் எஸ்.பி.எஸ் மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 843 கோரிக்கை மனுக்களும், திருச்சிராப்பள்ளி மாநரகாட்சி பகுதிகள் மண்டலம் 5 வார்டு எண் 55 பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திருச்சிராப்பள்ளி கருமண்டபம் எஸ்.பி.எஸ் மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 615 கோரிக்கை மனுக்களும், மணச்சநல்லூர் ஊராட்;சி ஒன்;றியம் எஸ்.புதூர்; ஊராட்சி பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் எஸ்.புதூர்; ரெட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 89 கோரிக்கை மனுக்களும், முசிறி ஊராட்சி ஒன்றியம் திருத்தலையூர் மற்றும் டி.புதுப்பட்டி ஊராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திருத்தலையூர் பஞ்சாயத்து தாட்கோ சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 684 கோரிக்கை மனுக்களும் என மொத்தம் 2231 கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 4 வார்டு எண் 56 பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கருமண்டபம் எஸ்.பி.எஸ் மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கலெக் டர்வே.ச ர வ ணன், (15.10.2025) பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், நாளை (16.10.2025) சிறுகமணி பேரூராட்சி வார்டு 9 முதல் 15 வரை உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் காவல்கார பாளையம் பேரூராட்சி திருமண மண்டபத்திலும், இலால்குடி நகராட்சி வார்டு எண் 23 மற்றும் 24 பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இலால்குடி நன்னிமங்கலம் நகராட்;சி ஆரம்ப பள்ளியிலும், உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியம் வைரி செட் டி பா ளை யம் ஊராட்சி பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வைரி செட் டி பா ளை யம் கொண்டாரெட்டி திருமண மண்டபத்திலும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் அசூர் மற்றும் திருநெடுங்குளம் ஊராட்சி பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அசூர் கிராம சேவை மையக் கட்டிடத்திலும், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம் மருங்காபுரி மற்றும் டி.இடையபட்டி ஊராட்சி பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மருங்காபுரி வி.பி.ஆர்.சி கட்டிடம் அருகிலும், தொட்டியம் ஊராட்சி ஒன்றியம் ஏலூர் பட்டி ஊராட்சி பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஏலூர்பட்டி கே.எஸ்.ஜெயம் திருமண மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் அனைவரும் இம்முகாமினை பயன்படுத்தி தங்களுடைய கோரிக்கை மனுக்களை அளித்து தீர்வு காணலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# பெரம்பலூர் மாவட்டம் அரும்பாவூர் பெரிய ஏரியில் கலெக்டர் ந.மிருணாளினி நேரில் ஆய்வு



பெரம்பலூர்,அக்.16-

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டத்திற்குட்பட்ட அரும்பாவூரில் நீர்வள ஆதாரத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அரும்பாவூர் பெரிய ஏரியை கலெக்டர் ந. மிருணாளினி (15.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கடந்த முறை பெய்த மழையில் அரும்பாவூர் பெரிய ஏரியின் கரை உடைப்பு ஏற்பட்டதால், தற்போது பருவமழை காலத்திற்கு முன்பே கரைகளை முறையாக பலப்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அரும்பாவூர் பெரிய ஏரியின் மூலம் 563.33 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றது. இந்த ஏரியின் கொள்ளளவு 52.63 மில்லியன் கன அடியாகும். கரையின் நீளம் 3,250 மீட்டர், 3 பாசன மதகுகளைக் கொண்ட ஏரியாகும். இந்த ஏரியின் நீர் தேங்கும் பரப்பு 220.40 ஏக்கர் ஆகும். அதிகபட்சம் நீர் தேங்கும் உயரம் 3.75 மீட்டர் ஆகும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மழை பெய்து வருவதாலும், அரும்பாவூர் பெரிய ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதியான பச்சைமலை அடிவாரத்தில் கனமழை பெய்து வருவதாலும் மழை நீரானது உடனடியாக ஏரிக்கு சென்று முழு கொள்ளளவை எட்டுவதற்கு வாய்ப்புள்ளது. எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கலெக்டர் அரும்பாவூர் பெரிய ஏரியினை பார்வையிட்டார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து ஏரிகளையும் தொடர்ந்து கண்காணித்து, மதகுகளில் உடைப்பு ஏற்படாமல் இருக்கவும், கரைகளை பலப்படுத்தவும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், பொது மக்கள், கால்நடைகள் மற்றும் விவசாய நிலங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நீர்வளத்துறை செயற்பொறியாளருக்கு உத்தரவிட்டார். மேலும், கரையோரம் உள்ள மக்கள் ஏரிகளில் தண்ணீர் நிரம்பி இருக்கும்போது செல்பி எடுத்தல், குளித்தல்,கால்நடைகளை குளிப்பாட்ட செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடாத வகையில் அவர்களுக்குத் தேவையான முன்னெச்சரிக்கை விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என கலெக்டர் அறிவுறுத்தினார்.

முன்னதாக, துறைமங்கலம் பெரிய ஏரியின் வரத்து வாய்க்கால்கள் தூர்வாரப்படும் பணிகளையும் கலெக்டர் பார்வையிட்டார்.

இந்த ஆய்வுகளில், நீர்வளத் துறை செயற்பொறியாளர் மு. பாண்டியன், உதவி செயற்பொறியாளர் இரா.சீனிவாசன், உதவி பொறியாளர் பார்த்திபன், வேப்பந்தட்டை வட்டாட்சியர் துரைராஜ் மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாரியபட்டியில் ஓம்நமச்சிவாயா அறக்கட்டளை சார்பில் நலத்திட்ட உதவிகள்

பொன்னமராவதி,அக்.16-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் ஓம் நமச்சிவாயா என்ற அறக்கட்டளை இயங்கி வருகிறது.சிங்கப்பூரில் உள்ள நண்பர்கள் மூலம் நிதியுதவி பெறப்பட்டு பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.அந்த வகையில் திருமயம் அருகே வாரியபட்டியில் நலிவடைந்த நிலையில் உள்ள குடும்பங்களுக்கு 37 வகையான மளிகை பொருட்கள் அடங்கிய இரண்டு மாதத்திற்கு தேவையான மளிகை சாமான்கள் ஓம்நமச்சிவாயா அறக்கட்டளை சார்பில் நிர்வாகிகள் வழங்கினர். இந்நிகழ்விற்கு ஓம்நமசிவாயா அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் கோட்டூர் சி.பாண்டியன்தலைமை வகித்தார் .இந்நிகழ்வில் ஓம்நமச்சிவாயா அறக்கட்டளை நிர்வாகி ஆசிரியர் கருப்பையா மற்றும் வாரியபட்டி பாலசுப்பிரமணியன், சி.சரவணன்பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பருவமழை காலத்தில் மின்சாதனங்களை ஈர கையால் இயக்க வேண்டாம்

## மேற்பார்வை பொறியாளர் எச்சரிக்கை

திருவாரூர்,அக்.16-

திருவாரூர் மாவட்டத்தில் மின் சாதனங்களை பொதுமக்கள் பாதுகாப்பான முறையில் கையாளுமாறு மேற்பார்வை பொறியாளர் லதா மகேஸ்வரி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,தமிழகத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை காலம் துவங்கவுள்ளதையடுத்து திருவாரூர் மாவட்டத்தில் பொதுமக்கள் மின்சாதனங்களை பாதுகாப்பான முறையில் கையாளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதன்படி எஸ்ஐஎஸ் முத்திரை பெற்ற தரமான மின் சாதனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்,பிளக்குகளை பொருத்துவதற்கு முன்பும்,பின்பும் ஸ்விட்சை ஆப் செய்துவிட்டு பயன்படுத்த வேண்டும்,பிரிட்ஜ்,மிக்சி,கிரைண்டர் போன்றவற்றிற்கு உரிய முறையில் எர்த் இணைப்பு வழங்கப்படுவதுடன் பின் சாக்கெட் கொண்ட பிளக்குகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்,உடைந்த சுவிட்ச்,பிளக் போன்றவற்றை உடனடியாக மாற்றி விட வேண்டும்,மின்மாற்றி மின்கம்பம் மற்றும் துணை மின் நிலைய ஆகியவற்றின் அருகே செல்லுவதையும் நிற்பதையும் தவிர்க்க வேண்டும்,அதன் அருகில் சிறுநீர் கழிப்பதை தவிர்க்க வேண்டும்,அருந்து கிடக்கும் மின்சாரம் கம்பிகள் மற்றும் பழுதடைந்த மின் கம்பிகளை தொட வேண்டாம்,இது தொடர்பாக புகார்களை அருகில் உள்ள மின்வாரிய பிரிவு அலுவலகங்களுக்கு பொதுமக்கள் தகவல் தெரிவி க்கலாம்,மேலும் தொடர்புடைய பிரிவு அலுவலர் முன் அனுமதி இல்லாமல் மின்கம்பி மற்றும் மின்பு பாதைகள் அருகில் செல்லும் மரம் மற்றும் மர கிளைகளை வெட்ட வேண்டாம்,மின் கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகளில் எவ்வித காரங்களுக்காகவும் பொதுமக்கள் ஏற வேண்டாம்,இடி மின்னல் போது டிவி,மிக்ஸி,கிரைண்டர்,செல்போன்,கணினி ஆகியவற்றை பயன்பாட்டு உபயோகப்படுத்தி தவிர்க்க வேண்டும்.இவ்வாறு பாதுகாப்பான முறையில் மின்சாதனைகளை கையாளும் பட்சத்தில் விபத்துகளை தடுக்க முடியும் என்பதால் பொதுமக்கள் இதை பின்பற்றலாம் என்று மேற்பார்வை பொறியாளர் லதா மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.
மனு எண்.ஓ.மு.அ2/4386/2025

பெ.ஆறுமுகம், த/பெ.பெருமாள் ,
மஜ்ரா 21/21, ராக்கம்பட்டி,
கூடலூர் கிராமம்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், குளித்தலை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் ஆறுமுகம் தனது தந்தை "பெருமாள் கவுண்டர்" "என்பவர் மேற்கூறிய முகவரியில் உள்ள வீட்டில் 10.05.1977 அன்று இறந்தார் என்று கூறி இறப்புச்சான்று வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் குளித்தலை சார் ஆட்சியர் அலுவலகத்தில் 7 தினங்களுக்குள் தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

பெ.ஆறுமுகம்,
மனுதாரர், கூடலூர் கிராமம்.

காணவில்லை

எனது கணவர் மறைந்த சோமு தேவர் அவர்கள் பெயரில் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் கிரய ஆவண எண் 1236/1994, கடந்த 25–09–2025 அன்று மன்னார்குடி கடைத்தெருவில் தவறி கீழே விழுந்து காணாமல் போய்விட்டது. தேடிபார்த்தும் கிடைக்கவில்லை. மேற்படி கிரய ஆவணத்தை கண்டு எடுத்தவர்கள் கீழே கண்ட முகவரியில் என்னிடம் ஒப்படைக்குமாறும் அல்லது தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

புஷ்பவள்ளி க/பெ. சோமு
123, முடுக்கு தெரு, எடகீழையூர், நீடாமங்கலம் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம் – 614013, செல் : 9043069394

காணவில்லை

எனது பெயரில் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் கிரய ஆவண எண் 954/2010, கடந்த 09–05–2025 அன்று மன்னார்குடி பெரியகடைத் தெருவில் ஜெராக்ஸ் எடுக்க நான் எடுத்து சென்ற போது அசல் பத்திரம் தவறி கீழே விழுந்து காணாமல் போய்விட்டது. தேடிபார்த்தும் கிடைக்கவில்லை. மேற்படி கிரய ஆவணத்தை கண்டு எடுத்தவர்கள் கீழே கண்ட முகவரியில் என்னிடம் ஒப்படைக்குமாறும் அல்லது தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

சரோஜினி க/பெ. குமார்
1/48, மெயின்ரோடு, மேலமருதூர், மன்னார்குடி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம் – 614717, செல் : 9943216875

மாண்பமை சீர்காழி சார்பு நீதிமன்றம்.
I.A.No. /2025 In
I.A.No.03/2025 &
I.A.No.2/2025 In
I.A.No.1/2025 In
unfiled O.S.No. /2025

தாவா சொத்துக்களின் கிரயதாரர்கள் சார்பாக அவர்களது பிரதிநிதிகள்
1.கண்ணன்,
2.ராஜசேகர்.
– மனுதாரர்கள்/வாதிகள்
– எதிர் –
1.சொரூபராணி, க/பெ.சங்கையன்,
2.ஔவை, க/பெ.நாகராஜன்,
3.இறைஎழில்,
க/பெ.நெடுஞ்செழியன்,
4.மகாதேவி,
க/பெ.முத்துகுமாரசாமி,
5.தமிழரசி, க/பெ.நாகராஜன்,
6.இந்திரா, க/பெ.பன்னீர்,
7.பானுமதி, க/பெ.சந்திரகாசன்,
8.பாலசுப்பிரமணியன்,
த/பெ.லெட்சுமணன்,
9.நெடுஞ்செழியன்,
த/பெ.லெட்சுமணன்,
10.ரமேஷ்குமார்,
த/பெ.லெட்சுமணன்,
11.இளஞ்செழியன்,
த/பெ.லெட்சுமணன்,
12.சுகுணா, த/பெ.ரெங்கசாமி,
13.அதியமான்,
த/பெ.பாலகிருஷ்ணன்,
மேற்படியார்களது விலாசம் சீர்காழி முன்சிபி மற்றும் தாலுக்கா, மாதானம் அஞ்சல், பனங்குடி,
பெரியகோப்பியம் கிராமம்.
– வாரிசுதாரர்கள் 26,27, 28,29,30,32,33,40,35,36,37,38,41 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளாக சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்.

மேற்படி நம்பரில் வாதிகள் தரப்பில் கொடுத்த விளம்பர அறிவிப்பு.

மேற்படி நம்பரில் வாதிகள் தரப்பில் பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தொடுத்து அதில் 7,12,15,17,25,21,24–ம் பிரதிவாதிகள் இறந்துவிட்டபடியால் அவர்களது வாரிசுதாரர்களை சேர்க்க வாரிசு மனு மற்றும் பிராது திருத்த மனு கொடுக்கப்பட்டதில் 26,27,28,29,30,32,33,40,35,36,37, 38,41 ஆகிய வாரிசுதாரர்கள்/ எதிர்மனுதாரர்களுக்கு பலமுறை படி கட்டியும் சம்மன் சர்வ் ஆகாததால் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவாகி அதற்கு வாய்தா 28.11.2025–ந் தேதி காலை 10.30 மணிக்கு போடப்பட்டுள்ளது என்பதை அறியவும். அன்றைய தினம் ஆஜராகவிடில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு ஏற்படும் என்பதை அறியவும்.

R.வேணுகோபாலன், B.A.B.L.,
S.சாந்தி, B.A.B.L.,
வழக்கறிஞர்கள், சீர்காழி.

வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை

அனுதேவி,
க/பெ.சத்தியராஜ்
52, மேலத் தெரு,
43 மணக்குடி கிராமம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாசியர்,
மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது பாட்டி தையல்நாயகி க/பெ.சுப்ரமணியன் என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் கடந்த 03.04.2017 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

அனுதேவி,
மனுதாரர், மயிலாடுதுறை.

வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை

அனுதேவி,
க/பெ.சத்தியராஜ்
52, மேலத் தெரு,
43 மணக்குடி கிராமம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாசியர்,
மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தத்தா "சுப்ரமணியன்" த/பெ.தொப்பை என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல் கடந்த 04.07.2016 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

அனுதேவி,
மனுதாரர், மயிலாடுதுறை.

மேதகு சிறப்பு சார்பு நீதிமன்றம் திண்டுக்கல்
M.C.O.P- NO- 304/2025
வீரமணி வகை
...........மனுதாரர்
-எதிர்-
மாரியம்மாள்
க/பெ சாமியப்பன்
# 80 அடி சாலை,
செங்குந்தபுரம் கரூர் 639002
.......... 1 ஆம் எதிர் மனுதாரர்

நோட்டீஸ்

மேற்படி மனுதாரர் வாகன விபத்து இழப்பீடு பரிகாரம் பெற திண்டுக்கல் சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் மேற்படி எண்ணில் மனு கொடுத்திருக்கிற படியால் அதைப்பற்றி உமக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் அதை நீங்கள் வருகின்ற 21.11.2025 ஆம் தேதி பகல் 10.00 மணிக்கு நீதிமன்றத்தில் நேரிலாவது வழக்கறிஞர் மூலமாவது ஆஜராகி அறிவித்துக்கொள்ளவும் அப்படி இல்லாவிட்டால் மேற்படி விஷயமாய் ஒரு தலை பட்சமாய் தீர்மானிக்கப்படும்.

கு.பா.சாக்ரடீஸ்,M.A.B.L.,
திண்டுக்கல் வழக்கறிஞர்

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

தமிழ்நாடு அரசு
நீர்வளத்துறை,
கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை 630 562.
மின்னணுமுறை ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
(இரண்டு உறை ஒப்பந்த முறை-1 எண்ணம் மற்றும் மொத்த வகை ஒப்பந்த முறை-2 எண்ணம்)
TNWRD
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.03 / கீ.வை.வ.வ / கோ.Tender Notice / 2025 -2026 / நாள்.06.10.2025.

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக நீர்வளத்துறை, கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை, கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் தமிழ்நாடு அரசிடம் நீர்வளத்துறை/ பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து www.tntenders.gov.in என்ற இணையவழியாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி நாள்: 24.10.2025 மொத்த பணிகள்: 03

வேலையின் தோராய மதிப்பு (GST வரி உட்பட): 662.40 இலட்சம்

மேலும் விபரங்களுக்கும், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இலவசமாக பெறவும் www.tntenders.gov.in என்ற இணையதளத்தை பார்க்கவும். ஒப்பந்தப்புள்ளி திருத்தங்கள், மாற்றங்கள் மற்றும் காலநீட்டிப்பு ஆகிய விவரங்கள் மேற்காணும் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

கண்காணிப்பு பொறியாளர், நீ.வ.து..,
கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை.
செ.ம.தொ.இ /5674 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க&ப) வட்ட அலுவலகம், சிவகங்கை
ஒப்பந்தப்புள்ளி படிவம் / மொத்த ஒப்பந்தம் / இனவிலைமுறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 27க. பொ / கட்டடம் (க&ப) வட்டம் / சிவ / 2025 - 2026 / நாள் : 14.10.2025
தமிழக ஆளுநரின் சார்பாக கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட (க&ப) வட்டம், சிவகங்கை அவர்களால் இரண்டு பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.
1) வ.எண்.1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் : 24.10.2025 மாலை 03.00 மணி முதல் 10.11.2025, மாலை 03.00 மணி வரை இணையதளத்தில் கிடைக்கும்.
4) வ.எண். 1 மற்றும் 2 - நாள் : 31.10.2025
5) வ.எண். 1 மற்றும் 2 - நாள் : 07.11.2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து
கட்டடம் (க&ப) வட்டம், சிவகங்கை
செ.ம.தொ.இ / 5678 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
1. சென்னை–8, எழும்பூர், ... குழந்தைகள் மருத்துவமனை ... சிகிச்சைப் பிரிவுக்கு தீயணைப்பு ...
2. சென்னை–8, எழும்பூர், ... குழந்தைகள் மருத்துவமனை ... தீயணைப்பு தெளிப்பான் ...
3. திருவள்ளூர் மாவட்டம் ...
குறிப்பு:–
1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் http://tntenders.gov.in.
செமதொஇ/ 5665 /ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கண்காணிப்பு பொறியாளர் ...
மின்னணு–ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
1 கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள ...
2 தருமபுரி மாவட்டம் சித்தேரி அரசு ... வளர்ப்பு மையம் கட்டடம் கட்டும் பணி
3 தருமபுரி மாவட்டம் ராயப்பன்கொட்டாயில் ... ஆய்வக கட்டடம் கட்டும் பணி
செ.ம.தொ.இ./5659/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
1. செங்கல்பட்டு மாவட்டத்தில் ... கல்லூரி மாணவர்கள் விடுதி ...
2. செங்கல்பட்டு மாவட்டத்தில் ... மேடை, கூரை, தரைகள், ... பார்க்கும் பணிகள் செய்யும் ...
3. செங்கல்பட்டு மாவட்டத்தில் ... உள்ள சமையலறை மற்றும் ... மேற்கூறை, கதவுகள், ஜன்னல் ...
4. செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் ... வளாகத்தில் உட்புற கான்கிரீட் ...
கடைசி நாள் மற்றும் நேரம் : 24.10.2025 ...
24.10.2025 மாலை 04.00 மணி

